பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

07 11 2024 6 45
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

- அமெரிக்க அதிபராக தேர்வு செய்யப்பட்டுள்ள திரு டொனால்டு ட்டிரம்புடன் மீண்டும் இணைந்து பணியாற்றுவதை தாம் எதிர்நோக்கி இருப்பதாக பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.
- கர்நாடக அரசு காவிரியில் நவம்பர், டிசம்பர் மாதங்களில் வழங்க வேண்டிய தண்ணீரை முறையாக வழங்க உத்தரவிட வேண்டும் என காவிரி ஒழுங்குமுறை ஆணையத்தில் தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது
- தமிழகத்தில் டெங்கு மற்றும் விஷக் காய்ச்சல் தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாநில அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.
- தமிழகத்தில் 11 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒருசில இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் போட்டியின் மாஸ்டர்ஸ் பிரிவில் இந்தியாவின் அர்ஜுன் எரிகேசி உள்ளிட்ட மூன்று வீரர்கள் முன்னிலையில் உள்ளனர்.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

**[]<<<>>>[]**

அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள திரு டொனால்டு டிரம்புடன் பிரதமர் திரு நரேந்திர மோடி தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர், தமது நண்பர் திரு டொனால்ட் டிரம்பின் வெற்றிக்கு வாழ்த்துத் தெரிவித்ததாகக் கூறியுள்ளார்.

தொழில்நுட்பம், பாதுகாப்பு, எரிசக்தி, விண்வெளி உள்ளிட்ட பல துறைகளில் இருநாடுகளுக்கும் இடையேயான உறவுகளை மேலும் வலுப்படுத்த ஆவலுடன் இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

திரு டொனால்ட் ட்ரம்புடன் இணைந்து மீண்டும் நெருக்கமாக பணியாற்றுவதை எதிர்நோக்கி இருப்பதாகவும் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

இதனிடையே அமெரிக்காவின் உண்மையான நண்பராக பிரதமர் திரு நரேந்திர மோடி திகழ்வதாக திரு டொனால்டு ட்டிரம்ப், கூறியுள்ளார்.

தாம் வெற்றிபெற்ற பின் முதலில் தொலைபேசியில் தம்மை தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்த முதல் உலகத் தலைவர் திரு நரேந்திரமோடிதான் என்று அவர் தெரிவித்துள்ளார்.

திரு நரேந்திரமோடி உலகம் விரும்பும் தலைவராக உள்ளார் என்றும் திரு டொனால்டு ட்டிரம்ப் புகழாரம் சூட்டியுள்ளார்.

[]<<<>>>[]

கர்நாடக அரசு காவிரியிலிருந்து தமிழகத்திற்கு நவம்பர், டிசம்பர் மாதங்களில் வழங்க வேண்டிய தண்ணீரை வழங்க உத்தரவிட வேண்டும் என காவிரி ஒழுங்குமுறை ஆணையக் கூட்டத்தில் தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது.

இந்த ஆணையத்தின் 35-வது கூட்டம் அதன் தலைவர் திரு எஸ் கே ஹல்தர் தலைமையில் நேற்று நடைபெற்றது.

கூட்டத்திற்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய நீர்வளத்துறையின் கூடுதல் தலைமைச் செயலர் திரு மணிவாசன், அக்டோபர் மாதம் வரையிலான காலகட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட நீரைவிட அதிக அளவில் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதாக கர்நாடக அரசு கூறியதாகத் தெரிவித்தார்.

அதிக அளவில் மழை பெய்து தேக்கி வைக்க முடியாத வெள்ள நீரை கணக்கில் எடுத்துக் கொள்ளக்கூடாது என தமிழக அரசு சார்பில் வலியுறுத்தப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இம்மாதம் 13 புள்ளி ஏழு எட்டு டி எம் சி-யும், டிசம்பர் மாதத்தில் ஏழு புள்ளி மூன்று ஐந்து டி எம் சி தண்ணீரும் வழங்க வேண்டுமென தெரிவித்ததாகவும் அவர் கூறினார்.

மாதந்தோறும் வழங்க வேண்டிய தண்ணீரை முறையாக வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி இருப்பதாக திரு மணிவாசன் தெரிவித்தார்.

[]<<<>>>[]

பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் தொடர்பாக அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

விழுப்புரத்தில் அரசு வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அவர், மகளிர் முன்னேற்றத்திற்காக செயல்படுத்தப்படும் திட்டங்களின் பலன்கள் அவர்களை முழுமையாக சென்றடைய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறினார்.

அனைத்து திட்டங்களின் பலன்களும் தகுதியுள்ள அனைவருக்கும் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

அதிகாரிகள் மக்களுக்கும், அரசுக்கும் பாலமாக செயல்பட வேண்டுமென்றும் திரு உதயநிதி ஸ்டாலின் கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

இந்த ஆண்டு தீபாவளி பண்டிகையையொட்டி ஐந்து லட்சத்திற்கும் மேற்பட்டோர் சென்னையிலிருந்து சொந்த ஊர்களுக்கு பயணித்துள்ளதாக மாநில போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

அரியலூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்கள் சொந்த ஊர்களுக்குச் செல்லவும், மீண்டும் பணியிடங்களுக்கு திரும்பவும் போக்குவரத்துத்துறை உரிய பேருந்து வசதிகளை செய்திருந்ததாகக் கூறினார்.

போக்குவரத்துத்துறை லாப நோக்கமின்றி செயல்படுவதாகவும் திரு சிவசங்கர் தெரிவித்தார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் டெங்கு மற்றும் விஷக் காய்ச்சல் தடுப்பு தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாநில அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், திமுக ஆட்சியில் மருத்துவத்துறை அலட்சியத்துடன் செயல்படுவதாகக் கூறியுள்ளார்.

மாநிலம் முழுவதும் காய்ச்சல் சிறப்பு மருத்துவ முகாம்களை நடத்த வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

கொசு மருந்து அடிக்கும் நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவதுடன், அரசு மருத்துவமனைகளில் போதிய மருந்துகள் இருப்பில் உள்ளதை உறுதி செய்ய வேண்டுமென்றும் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

[]<<<>>>[]

திருச்செந்தூர் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோவிலில் கந்த சஷ்டி திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான சூரசம்ஹாரம் இன்று மாலை நடைபெறுகிறது.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( சவுண்ட்பைட் - லஷ்மணன்) -45--- செகண்ட்*

திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி ஆலயத்திலும் இன்று சூரசம்ஹாரம் நடைபெறுகிறது.

நாகை மாவட்டம் சிக்கல் சிங்காரவேலர் ஆலயத்தின் கந்த சஷ்டி விழாவின் முக்கிய நிகழ்வான அம்பாளிடமிருந்து முருகன் வேல்வாங்கும் நிகழ்வு நேற்று இரவு நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று வழிபட்டனர்.

**[]<<<>>>[]**

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் வனப் பகுதியையொட்டிய பகுதிகளில் காட்டு யானைகளின் நடமாட்டம் உள்ளதால் பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு வனத்துறை கேட்டுக் கொண்டுள்ளது.

யானைகளை ட்ரோன் மூலம் அதிகாரிகள் கண்காணித்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - ராஜா ) --40--- செகண்ட்*

**[]<<<>>>[]**

தமிழகத்தில் 11 மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர் மயிலாடுதுறை, நாகப்பட்டினம் உள்ளிட்ட மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கன மழை பெய்யக்கூடும் என்று அது கூறியுள்ளது.

தமிழகத்தின் பிற பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

லெபனான் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஹெஸ்புல்லா அமைப்பின் முக்கிய பிரமுகர் ஹுசைன் அப்த் அல் ஹலீம் ஹர்ப் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

பனாமா நாட்டில் பெய்த கனமழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் ஐந்து பேர் உயிரிழந்தனர்.

**[]<<<>>>[]**

ஆஸ்திரேலியா சென்றுள்ள வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர், அங்கு நியூசிலாந்து துணைப் பிரதமர் திரு வின்ஸ்டன் பீட்டர்சை சந்தித்து இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்துப் பேச்சு நடத்தினார்.

[]<<<>>>[]

இந்திய - அமெரிக்க ராணுவ ஒத்துழைப்புக் குழுவின் 21-வது கூட்டம் புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

[]<<<>>>[]

ஆஸ்திரேலியாவின் சிட்னியில் நடைபெற்ற 67-வது காமன்வெல்த் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தலைவர்கள் மாநாட்டில் தமிழக சட்டப்பேரவைத் தலைவர் திரு அப்பாவு பங்கேற்றார்.

[]<<<>>>[]

நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் ஆட்சியர் திருமதி லட்சுமி பவ்யா தலைமையில் பழங்குடியினருக்கான வேலைவாய்ப்பு திறன் வழிகாட்டி நிகழ்ச்சி நடைபெற்றது.

[]<<<>>>[]

திருவள்ளூர் மாவட்டத்தில் எஸ் சி, எஸ் டி பிரிவினருக்கு செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள் குறித்து அதன் தேசிய ஆணையத்தின் உறுப்பினர் திரு வட்டபள்ளி ராம்சந்தர் ஆய்வு செய்தார்.

[]<<<>>>[]

தேனி மாவட்டம் அகமலை பகுதியில் கனமழை காரணமாக மண்சரிவு ஏற்பட்ட இடங்களில் நடைபெற்று வரும் சீரமைப்பு பணிகளை ஆட்சியர் திருமதி ஷஜீவனா நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்

[]<<<>>>[]

நாமக்கல் மாவட்டம் பேளுக்குறிச்சியில் புதிதாக கட்டப்பட்டுள்ள மிளகு பதப்படுத்தும் மையத்தை ஆட்சியர் திருமதி உமா ஆய்வு செய்தார்.

[]<<<>>>[]

சென்னையில் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 19 மண்டல உதவி ஆணையர் அலுவலகங்களில் நாளை மறுநாள், பொது விநியோகத் திட்ட் குறைதீர்ப்பு முகாம் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

சென்னையில் இருந்து புருனேவுக்கு நேரடி விமான சேவை தொடங்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் போட்டியின் மாஸ்டர்ஸ் பிரிவின் இரண்டாவது சுற்றில் இந்தியாவின் அர்ஜுன் எரிகேசி, ஈரானின் அமின், பிரான்ஸின் மேக்ஸின் ஆகியோர் முன்னிலையில் உள்ளனர்.

நேற்று இரண்டாவது சுற்று முடிவில் மூன்று வீரர்களும் தலா ஒன்று புள்ளி ஐந்து புள்ளிகளை பெற்றிருந்தனர்.

அமெரிக்க வீரர் லெவன் ஆரோனின் உடனான போட்டியை அர்ஜூன் எரிகேசி ட்டிரா செய்தார்.

சேலஞ்சர்ஸ் பிரிவில் இரண்டாவது சுற்று முடிவில் இந்தியாவின் ப்ரணவ், லியோன் லூக் ஆகியோர் தலா இரண்டு புள்ளிகளுடன் முன்னிலையில் உள்ளனர்.

**[]<<<>>>[]**